II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 194 of 2024**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 12.03.2026

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | Pushpa | Age | : | |
| Father's / Husband's Name | : | | Village | : | |
| Taluk | : | | Distict | : | |

1. 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–

நான் 4ம் வாதி என்றால் சரிதான். என் தாயார் பெயர் பத்மாவதி. என் பெற்றோர் இறந்துவிட்டனர். 3ம் பிரதிவாதி பவானி எனது மூத்த சகோதரி. பவானியின் கணவர் பெயர் கிருஷ்ணமூரத்தி எனது தாயாரின் உடன் பிறந்த சகோதரர் ஆவர். அவர் 06.07.2006ல் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு அவரது மனைவி பவானி மற்றும் 4 முதல் 6 பிரதிவாதிகள் வாரிசுகள் என்றால் சரிதான். துரைசாமி நாயக்கர் எனது தாயாரின் தந்தையாவார். அவர் எப்போது காலமானார் என்று ஞாபகம் இல்லை. அவர் இறக்கும் போது எனக்கு 8 வயது. தற்போது எனக்கு 47 வயதாகிறது. அப்படி எனில் 39 ஆண்டுகளுக்கு முன்பு எனது தாத்தார் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். துரைசாமி நாயக்கருக்கு இரண்டு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவி பெயர் பொன்னியம்மாள். 1ம் வாதி பொன்னியம்மாள் மூலம் பிறந்த ஒரே மகள் ஆவார். பொன்னியம்மாள் இறந்த பிறகு என் தாத்தா மாணிக்கம்மாளை 2வதாக திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மணி, 2ம் வாதி கோதண்டன், 3ம் வாதி பஞ்சாட்சரம், என் தாயார் பத்மாவதி,

கிருஷ்ணமூர்த்தி மற்றும் ஜானகி ஆகியோர் மாணிக்கம்மாள் மூலம் பிறந்த பிள்ளைகள் ஆவர். சங்கர், பாஸ்கர் ஆகியோர் என் உடன் பிறந்த அண்ணன்கள். அவர்கள் இருவரும் இறந்துவிட்டனர். இருவருக்கும் திருமணம் ஆகவில்லை. எனது வழக்குரையில் இவர்கள் இருவரை பற்றியும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். சங்கர் 2021ல் இறந்தார். அப்போது அவருக்கு வயது 54. சங்கருக்கு திருமணம் ஆகி அவரது மனைவி விட்டு சென்றுவிட்டார். சங்கருக்கு திருமணம் ஆகவில்லை என்று நான் சொன்னது தவறு என்றால் அவரது மனைவி விட்டு விட்டு போய்விட்டதால் அவ்வாறு சொன்னேன். அவர்கள் இருவருக்கும் விவாகரத்து ஆனதா என்று எனக்கு தெரியாது. என் தாத்தா கோவிந்த ராஜர் என்பவரிடம் பண்ணையாளாக வேலை பார்த்தார் என்றால் எனக்கு தெரியாது. 2, 3 வாதிகளுக்கு இந்த விவரம் தெரியும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா பண்ணையாளக வேலை பார்த்து ஓய்வு பெற்ற போது வந்த தொகையை தனது அனைத்து குழந்தைகளுக்கும் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி தொடர்ந்து பண்ணையளாக வேலை பார்த்ததால் அவருக்கு வழக்கு சொத்தை கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. என் தாத்தா தான் அனுபவித்து வந்தார். 1ம் பிரதிவாதி மணி 2ம் பிரதிவாதி பெயரில் ஒரு தான செட்டில்மெண்டை எழுதி வைத்துள்ளார் என்றால் ஆம். 2ம் பிரதிவாதி அதன்படி அடைந்த சொத்தை எனது அக்காள் பவானிக்கு கிரைய செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அதை தவிர 8ம் பிரதிவாதிக்கும் 2ம் பிரதிவாதி ஒரு பகுதியை கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பவானிக்கும் 2ம் பிரதிவாதிக்கும் இடையே கிரைய தொகை செலுத்தாதது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்கு முன்பு வாதிகளாகிய நாங்க ளும், 7ம் பிரதிவாதியும் சேர்ந்து ஒரு சட்ட

அறிவிப்பு அனுப்பினோம் என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி பின்னிட்டு உண்மையை தெரிந்து கொண்டு எங்களுடன் வழக்கு போட வரவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் ஒரு பகுதி 2ம் பிரதிவாதியிடமும், ஒரு பகுதி பவானியிடமும், ஒரு பகுதி 8ம் பிரதிவாதியிடமும் உள்ளது என்றால் சரிதான். பவானி கிரையம் வாங்கிய போது எனக்கு தெரியும். வழக்கு சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து துரைசாமி நாயக்கரின் சொத்து அல்ல என்றும் எனவே எங்களுக்கு வழக்கு சொத்தில் பாகம் கிடைக்கவேண்டியதில்லை என்றாலும் சரியல்ல. எங்களுக்கு பாகம் கிடைக்கவேண்டும்.

மறுவிசாரணை இல்லை.